



http://www.maalaimalar.com Regd. No. TN/CCN/471/2015-2017 RNI.No.42526/83

# மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்
MAALAI MALAR

சென்னை 14-9-2017 (வியாழக்கிழமை) ★★★ | மலர் 40 இதழ் 273


ஐகோர்ட்டில் அரசு தகவல்

## போராட்டம் நடத்திய

# ஆசிரியர்களுக்கு சம்பளம் கிடையாது

## 43,508 பேர் மீது ஒழுங்கு நடவடிக்கை

சென்னை, செப். 14–

நீட் தேர்வால் மாநில பாடத் திட்டத்தில் படித்த மாணவர்கள், மருத்துவ கல்வி படிக்க முடியாமல் தவித்து வருகிறார்கள்.

இதுபோன்று பாதிக்கப் பட்ட மாணவர்கள், மற்றும் பெற்றோர்களுக்கு மனநல ஆலோசனை வழங்க குழு அமைக்கும்படி, தமிழக அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று வக்கீல் சூர்ய பிரகாசம் சென்னை ... தொடர்ந்தார்.

### கடும் கண்டனம்

இந்த வழக்கை நீதிபதி கிருபாகரன் விசாரித்து வருகிறார். நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, அரசு ஊழியர் கள்–ஆசிரியர்களின் போராட்டத்துக்கு அவர் கடும் கண்டனம் தெரிவித்தார்.

போராட்டத்தால் மாண வர்கள் பாதிக்கப்பட்டால் சம்பளத்தில் இருந்து


ADHIYAMAAN
COLLEGE OF AGRICULTURE AND RESEARCH
(Approved by Govt of TN and Affiliated to TNAU-Coimbatore)
www.acar.ac.in
Hosur, Athimugam Village, Krishnagiri Dist. T.N.
ADMISSION 2017-18 (M.Q)
Last date 15.09.2017
B.Sc (Agriculture) - 4 Years
Admission Help Lines :9843984801, 9787243599, 9080822363, 7010240253, 04344–261034, 261001

நீட் தேர்வை தமிழ்நாட்டு பக்கம் அனுமதிக்கவில்லை. காரணம் இப்படி அனிதா போல ஒரு மாணவி

## தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் சென்னை கிளை முன்பாக CP/136/CAA/2017

முன்னர் வரையறையுள்ள ஒரிசா உயர் நீதிமன்றத்தால் முடிவு (செய்யப்பட்ட சி பி எண். 37/2016க்கு தொடர்புடையது

நிறுவனங்கள் சட்டம் 1956 மற்றும் நிறுவனங்கள் சட்டம் 2013 விஷயத்தில் மற்றும்

நிறுவனங்கள் சட்டம் 1956 பிரிவுகள் : 391 முதல் 394 மற்றும்/ அல்லது நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவுகள் : 391 முதல் 394 (பொருந்தும் வகையில்) விஷயத்தில்

மற்றும்

ஓசிஎல் இந்தியா லிமிடெட் (மனுதாரர் / மாற்றும் நிறுவனம் 1) டால்மியா சிமெண்ட் ஈஸ்ட் லிமிடெட் (மாற்றும் நிறுவனம் - 2) ஸ்ரீ ரங்கம் செக்யூரிஸ் & ஹோல்டிங்ஸ் லிமிடெட் (மாற்றும் நிறுவனம் 3) டால்மியா பாரத் சிமெண்ட் ஹோல்டிங்ஸ் லிமிடெட் (மாற்றும் நிறுவனம் 4) மற்றும் ஒடிசா சிமெண்ட் லிமிடெட் (மாற்றம் பெறும் நிறுவனம்) விஷயத்தில்

ஓசிஎல் இந்தியா லிமிடெட்
(CIN: L26942TN1949PLC117481)
பதிவு அலுவலகம்.
டால்மியாபுரம், லால்குடி தாலுக்கா.
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
தமிழ் நாடு - 621 651
Phone : 011 23465314
E-Mail : goria.rachna@dalmiacement.com
Website-www.oclindialtd.in

மனுதாரர் / மாற்றும் நிறுவனம் 1

### மனு விளம்பரம்

ஓசிஎல் இந்தியா லிமிடெட் (மனுதாரர் / மாற்றும் நிறுவனம் 1) டால்மியா சிமெண்ட் ஈஸ்ட் லிமிடெட் (மாற்றும் நிறுவனம் 2) ஸ்ரீரங்கம் செக்யூரிஸ் & ஹோல்டிங்ஸ் லிமிடெட் (மாற்றும் நிறுவனம் 3) டால்மியா பாரத் சிமெண்ட் ஹோல்டிங்ஸ் லிமிடெட் (மாற்றும் நிறுவனம் 4) மற்றும் ஒடிசா சிமெண்ட் லிமிடெட் (மாற்றம்பெறும் நிறுவனம்) ஆகியவற்றின் இடையில் இணைப்பு ஏற்பாட்டிற்கான ஒரு திட்டத்திற்கு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் சென்னை கிளையின் அனுமதியை பெறுவதற்காக, நிறுவனங்கள் சட்டம் 1956 பிரிவுகள்: 391 முதல் 394 மற்றும்/அல்லது நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவுகள்: 391 முதல் 394 (பொருந்தும் வகையில்) இன் கீழ், மனுதாரர் மற்றும் மாற்றும் நிறுவனம் 1 ஆல் 21.07.2017 அன்று தாக்கல் செய்யப்பட்டு. அம்மனு 31.08.2017 அன்று அனுமதிக்கப்பட்டு, தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை கிளை முன்பாக 16.10.2017 அன்று விசாரணைக்காக நிச்சயிக்கப்பட்டுள்ளது. அந்த மனுவை ஆதரிக்க அல்லது எதிர்க்க விரும்பும் எந்தவொரு நபரும் தனது விருப்பத்தைத் தெரிவிக்கும் அவரால் அல்லது அவரது வழக்கறிஞரால் கையொப்பமிடப்பட்ட மற்றும் அவர்களது பெயர் மற்றும் முகவரியுடன்கூடிய அறிவிப்பை, மனுதாரர் மற்றும் மாற்றும் நிறுவனம்-1 இன் வழக்கறிஞர்களுக்கு, மனுவை விசாரிப்பதற்குக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு இரண்டு நாட்கள் முன்னதாக கிடைக்கும்படி அனுப்பவேண்டும். மனுவை எதிர்க்கும் நபர், தனது எதிர்ப்புக்கான காரணங்களை அல்லது பிரமாண வாக்குமூலத்தை தனது அறிவிப்போடு அனுப்ப வேண்டும். நிறுவன மனு எண். சி பி எண். 136/2017 இன் ஒரு நகல், அதை வேண்டும் எந்தவொரு நபருக்கும், அதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணத்தை செலுத்தும் பட்சத்தில், அடியில் கையொப்பமிட்டுள்ள நபரால் அனுப்பி வைக்கப்படும்.

2017ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ஆம் தேதியன்று சென்னையில் தேதியிடப்பட்டது.

திருவாளர்கள் ஆர். பார்த்தசாரதி,
இராஹுல் பாலாஜி,
மதன் பாபு & விஷ்ணு மோஹன்,
மனுதாரர்/மாற்றும் கம்பெனி -1 இன் வழக்கறிஞர்கள்,
எண். 2, லா சேம்பர்ஸ், உயர்நீதி மன்றம்,
சென்னை - 600 104



தனது உயிரை இழந்துவிட கூடாது என்பதற்காக. அடித்தட்டுமக்கள், ஏழை மக்களுக்கு மருத்துவ படிப்பு எட்டாக்கனியாக, கனவாக போய்விடும் என்பதால் தான் தொடர்ந்து நீட்டை எதிர்த்தார்... அது அம்மா ஆட்சி..

ஆனால் இன்று நீட்டின இடத்தில் எல்லாம் கையெழுத்து போட்டுவிட்டு ஆட்சி நடத்துகிறார்கள்.. இது அம்மாவை ஏமாத்துகின்ற சும்மா ஆட்சி. யாராலோ ஆட்டுவிக்கப்படும் பொம்மை ஆட்சி. கிட்டத்தட்ட 88 எம்.எல்.ஏக்களை கையில் வைத்துக்கொண்டு பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக இருக்கும் தி.மு.க.வும் இதை வலுவாக எதிர்க்கவில்லை.

நாடகம்

மீத்தேன் திட்டம், ஹைட்ரோ கார்பன் இதெல்லாம் தமிழகத்திற்குள் வர காரணமானவர்கள் தான் இன்று, நெடுவாசலிலும் கதிராமங்கலத்திலும் மங்கலம் பாடிக்கொண்டு இருக்கிறார்கள். நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள். நீட் தேர்வை இந்தியா

IN THE COURT OF XVII ADDL., DISTRICT JUDGE SINGARAVELAN MALIGAI, CHENNAI-1.
O.S.No.951 of 2017

1. Nagarajan, S/o. Late Nagappan
2. P.Manimegalai, D/o. Late Nagappan
3. A.Kalaivani, D/o. Late Nagappan, W/o. Anbumani.
4. Tmt. K.Radhika, D/o. Late Ramani

-Plaintiffs

-Versus-

1. N.Shyamala, D/o. Late Nagappan, And 4 Others

-Defendants

To.
Mr. K.Ramesh, (5th Defendant), S/o. Late Ramani, No.61/40, 3rd Street, Samiyar Thottam, Vyasarpadi, Chennai-600 039.

Sir.

Take notice that the plaintiffs have filed suit for Partition against you. The suit came up for admission before the Learned XVII Addl. District Judge, Chennai-1 and the Hon'ble Judge was pleased to order paper Publication on or before 13.10.2017.

Kindly make necessary arrangement to appear on 13.10.2017 at 10.30 A.M. before the above said court either in person or through your counsel, failing which the matter will be decided in your absence on merits.

M.MARUDHACHALAM
Counsel for Plaintiffs.

IN THE Ist ADDITIONAL FAMILY COURT AT CHENNAI
H.M.OP. NO. 3122 OF 2016

J.Sangeetha ...Plaintiff
Vs
S.P. Jayaselan ...Defendant

To
S.P.Jayaselan
S/o S.Peter No. 108, 13th Cross Street,
Rail Nagar, Maraimalai Nagar.

LEGAL NOTICE

Take notice that the above suit is filed against you, before the Ist Additional Family court, chennai and the Hon'ble court was pleased to order notice to you returnable by 28.09.2017. Be present at 10.30am in person or through pleader failing which the matter will be decided in your absence.

J.SANGEETHA
PARTY IN PERSON

கள் ஏன் அவர்களுக்கு அர்ச்சனை செய்து, பூஜை செய்து சேவிக்கிறார்கள்..? மடியில் கனம் இருப்பதால் தானே..?

ஜெயலலிதா மரணம்

சசிகலாவை பொதுச் செயலாளராக நியமித்த போது அது அவர்களின் உட்கட்சி விவகாரம் என்பதால் அதை நான் எதிர்க்கவில்லை. ஆனால் அதே சசிகலா முதல்வர் ஆக ஆசைப்பட்டபோது அது வேண்டாம், அந்தம்மா ஆக முடியாது. இது அவரை சிக்க வைக்கும் சூழ்ச்சி என முதல் ஆளாக குரல் கொடுத்தவன் நான். அதை கேட்டிருந்தால் இருந்திருக்கலாம் குளுகுளு அறையில். கேட்காததால் இன்று அந்தம்மா இருக்கிறார் சிறையில்.

இப்போது பொதுக் குழுவை கூட்டி தீர்மானம் போட்டார்களே, அதில் அம்மாவை. அப்பல்லோ மருத்துவமனையில் சேர்த்ததில் இருந்து அவர் மரணத்தை தழுவிய நாள் வரை என்ன நடந்தது என்பதை கண்டுபிடிப்போம் என தீர்மானம் போடவில்லையே. இதற்காக கமிஷன் அமைக்கவேண்டும், உண்ணாவிரதம் இருப்பேன் என சொன்ன ஓ.பி.எஸ் அதையெல்லாம் காற்றில் பறக்கவிட்டுவிட்டார். அப்பல்லோ மர்மம் பற்றி இனி அப்படியே மறந்து விடுவார்கள்.

ரஜினி-கமல் கட்சி

நீட் தேர்வுக்கு எதிராக இதுவரை ஏன் தீர்மானம் இயற்றவில்லை. அதேசமயம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், புரட்சித்தலைவி அம்மா இருந்த இடத்தில் வேறு யாரும் பொதுச்செயலாளராக இருக்க தகுதியானவர் இல்லை என தீர்மானம் போட்டார்களே. அது ஒன்றுதான் உண்மை.

ரஜினி, கமல் எனது இனிய நண்பர்கள். அவர்கள் அரசியலுக்கு வருவது அவரவர் விருப்பம். ஜனநாயக நாட்டில் யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம். ஆனால் அப்ப வருவேன், இப்ப வருவேன் என பில்டப் கொடுக்காமல் அதை உடனடியாக செய்ய வேண்டும்..

இவ்வாறு டி.ராஜேந்தர் கூறினார்.



## மாரத்தான் ஓட்டம்

போரம்மால் சார்பில் அல்சைமர் நோய் ஆராய்ச்சிக்காக நிதி திரட்டும் நோக்கில் மாரத்தான் ஓட்டத்துக்கு எற்பாடு செய்யப்பட்டுள்ளது. சென்னை, பெங்களூர், ஐதராபாத், மங்களூர் ஆகிய 4 நகரங்களில் 5 போரம் மால் சார்பில் வருகிற 24-ந்தேதி மாலை 5 மணிக்கு இந்த மாரத்தான் ஓட்டம் நடக்கிறது. சென்னையில் பெசன்ட் நகரில் நடக்கிறது. இந்த மாரத்தான் ஓட்டங்களில் 10 ஆயிரம் பேர் பங்கேற்கிறார்கள். இந்த தகவலை போரம் விஜயாமால் பொது மேலாளர் உமேஷ் அய்யர் தெரிவித்தார். அப்போது டாக்டர்கள் கிருஷ்ணபிரசாத், மீனாட்சிசுந்தரம், பெண் பைக்ரைசர் அலிஷா அப்துல்லா உடன் இருந்தனர்.

ஸ்ரீவில்லிபுத்தூரில்

ஸ்ரீவில்லிபுத்தூரில் முன்னாள் அமைச்சர் இன்பத்தமிழன் உள்ளிட்ட 7 பேர் எடப்பாடி உருவ பொம்மையை எரித்ததாக இளைஞரணி மாநில துணை செயலாளருமான வி.கே.பி. சங்கர் உள்ளிட்ட 5 பேரையும் கைது செய்தனர். இவர்கள் பாளை சிறையில் அடைக்கப்பட்டனர்.

### ரூ.50 லட்சம் கேட்டு கடத்தி கொலை

# வாலிபர் உடல் தோண்டி எடுப்பு

திருவொற்றியூர், செப். 14-

திருவொற்றியூர், ஜோதி நகர் 8-வது தெருவில் வசித்து வருபவர் அஜய்குமார். திருவொற்றியூர் மெட்ரோ ரெயில் பணியில் ஒப்பந்த அடிப்படையில் மேற்பார்வையாளராக பணியாற்றி வருகிறார்.

இவரது மகன் அவினாஸ் பூசன் (வயது28). ஐ.டி.ஐ. படித்து விட்டு வேலை தேடி வந்தார்.

கடத்தி கொலை

கடந்த 7-ந்தேதி வீட்டில் இருந்து வெளியே சென்ற அவினாஸ் பூசன் திரும்பி வரவில்லை. அவரை நண்பர்களே ரூ.50 லட்சம் கேட்டு கடத்தி கொலை செய்து இருப்பது தெரிந்தது.

இது தொடர்பாக அவினாஸ் பூசனின் நெருங்கிய நண்பரான சடையாங்குப்பம், பர்மா நகரைச் சேர்ந்த வெங்கடேசன், பீகாரைச் சேர்ந்த ரமேஷ் ஆகிய 2 பேரை சாத்தாங்காடு போலீசார் கைது செய்தனர்.

உடல் பரிசோதனை

கடத்தலுக்கு ஒத்துழைக்காததால் அவினாஸ்பூசனை கொன்று உடலை சடையான்குப்பம் பகுதியில் உள்ள புதரில் புதைத்து விட்டதாக கைதான 2 பேரும் தெரிவித்து இருந்தார்கள். இதையடுத்து அவினாஸ் பூசனின் உடலை தோண்டி எடுத்து பரிசோதனை செய்ய போலீசார் முடிவு செய்து இருந்தனர். இன்று மதியம்



கொலை செய்யப்பட்ட அவினாஸ்பூசன்

அவினாஸ் பூசன் உடல் புதைக்கப்பட்ட இடத்தை குற்றவாளிகள் இருவரும் அடையாளம் காட்டினர். இதைத் தொடர்ந்து தாசில்தார் செந்தில்நாதன் முன்னிலையில் உடல் தோண்டி எடுக்கப்பட்டது.

ஸ்டான்லி அரசு ஆஸ்பத்திரி டாக்டர்கள் கோகுலகிருஷ்ணன், பிரியதர்ஷினி ஆகியோர் அங்கேயே அவினாஸ் பூசன் உடலை பிரேத பரிசோதனை செய்தனர். பின்னர் அவரது உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதையொட்டி அங்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.

இந்த கொலையில் மற்றொரு குற்றவாளியான சூர்யா தொடர்ந்து தலைமறைவாக உள்ளார். அவரை கைது செய்ய போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

### பரவலாக மழை

# காஞ்சீபுரம் மாவட்டத்தில் 10 பாசன ஏரிகள் நிரம்பின

சென்னை, செப். 14-

காஞ்சீபுரம் மாவட்ட பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (நீர் ஆதாரத்துறை) முத்தையா நிருபர்களிடம் கூறியதாவது:-

நீர்வரத்து

காஞ்சீபுரம் மாவட்டத்தில் மொத்தம் 924 ஏரிகள் உள்ளன. மாவட்டத்தின் வழியாக பாலாறு, வேகவதி ஆறு, செய்யாறு, சென்னை அடையாறு, ஓங்கூல், கிளியாறு ஆகிய 6 ஆறுகள் ஓடுகிறது.

தற்போது பெய்து வரும் மழையினால் தாமல் ஏரி, தென்னேரி, உத்திரமேரூர் ஏரி, ஸ்ரீபெரும்புத்தூர் ஏரி, பிள்ளைப்பாக்கம் ஏரி உள்பட பல்வேறு ஏரிகளில் நீர்வரத்து வந்து கொண்டிருக்கிறது. மேலும் மாவட்டத்தில் 10 சிறுபாசன ஏரிகள் முழு கொள்ளளவை எட்டியுள்ளது.

மாவட்டத்தில் மிகப்பெரிய பாசன ஏரியான மதுராந்தகம் ஏரிக்கு சமீபத்தில் பெய்த மழையால் நீர் வந்து கொண்டிருக்கிறது. மேலும் சென்னை புறநகர் பகுதியில் உள்ள செம்பாக்கம் ஏரி, நன்மங்கலம் ஏரி, சேலையூர் ஏரி, கடமலைப்புத்தூர் ஏரி உள்பட பல்வேறு ஏரிகள் நிரம்பி வருகிறது. இதன்மூலம் குடிநீர் மற்றும் பாசன வசதிகளை பொதுமக்கள் பெற்று வருகின்றனர்.

பணிகள்

காஞ்சீபுரம் கலெக்டர் அலுவலகம் அருகேயுள்ள செவிலிமேடு ஏரியும் தீவிர கண்காணிப்பில் உள்ளது.

காஞ்சீபுரம் மாவட்டத்தில் புயல், மழை, வெள்ளத்தை சமாளிக்க மாவட்ட கலெக்டர் பொன்னையா அறிவுரையின்பேரில் பொதுப் பணித்துறையினர் தயார் நிலையில் உள்ளனர்.

புயல் வெள்ளத்தை சமாளிக்க அந்தந்த பகுதி பொதுப்பணித்துறை அலுவலகத்தில் 2 லட்சத்து 40 ஆயிரம் கோணிப்பைகள், 50 லோடு மணல், 50 டன் சவுக்கு கட்டைகள் ஆகியவற்றை சேகரிக்கும் பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.